அந்தரங்கமானது

**OLD**

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020


## 72 - தமிழ்

### (பழைய பாடத்திட்டம்)

### புள்ளியிடும் திட்டம்

Department of Examinations





இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
# 72 - தமிழ் ( பழைய பாடத்திட்டம்)
# புள்ளி வழங்கும் திட்டம்

## பத்திரம் I

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 24 புள்ளிகள் |
| வினா 02 | | 16 புள்ளிகள் |

**பகுதி II**

எவையேனும் 3 வினாக்கள்

| | | |
|---|---|---|
| | 20 × 3 | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

Department of Examinations

## பத்திரம் II

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 30 புள்ளிகள் |
| வினா 02 | | 20 புள்ளிகள் |
| வினா 03 | | 20 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| பிரிவு அ (ஏதேனும் 1 வினா) | 15 × 1 | 15 புள்ளிகள் |
| பிரிவு ஆ (ஏதேனும் 1 வினா) | 15 × 1 | 15 புள்ளிகள் |
| | மொத்தம் | 100 புள்ளிகள் |

**இறுதிப் புள்ளி கணித்தல்**

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் I | 100 புள்ளிகள் | | |
| பத்திரம் II | 100 புள்ளிகள் | | |
| மொத்தம் | 200 புள்ளிகள் | | |
| இறுதிப் புள்ளி | 200 ÷ 2 | = | 100 புள்ளிகள் |

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
## தமிழ் I
## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

### பகுதி I

01. (i) அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ. 04 புள்ளிகள்
(ii) அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ. 04 புள்ளிகள்
($12 + 12 = 24$ புள்ளிகள்)

02. (அ) அல்லது (ஆ)
(i) 04 புள்ளிகள் (ii) 04 புள்ளிகள் (iii) 04 புள்ளிகள்
(iv) 04 புள்ளிகள்
($04 \times 04 = 16$ புள்ளிகள்)

### பகுதி II

03. அ. 06 புள்ளிகள் ஆ. 06 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்
ஈ. 02 புள்ளிகள்
($06 + 06 + 06 + 02 = 20$ புள்ளிகள்)

04. அ 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ புள்ளிகள்)

05. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ புள்ளிகள்)

06. அ. 08 புள்ளிகள் ஆ. 06 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்
($08 + 06 + 06 = 20$ புள்ளிகள்)

07. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
($05 \times 04 = 20$ புள்ளிகள்)

08. அ. ஆ. இ. ஈ. } பரீட்சார்த்திகள் தெரிவு செய்யும் இரு தலைப்புகளுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் வழங்குக.
($10 \times 2 = 20$ புள்ளிகள்)

Department of Examinations

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ................................................................ ✓ △ 4/5
................................................................
................................................................

(ii) ................................................................ ✓ △ 3/5
................................................................
................................................................

(iii) ................................................................ ✓ △ 3/5
................................................................
................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus)

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දෙමළ I
தமிழ் I
Tamil I

**72 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீ ரோலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினேம்.

(அ) இச்செய்யுள் எத்துறையில், யாரை நோக்கி, யார் கூறுவதாக அமைந்துள்ளது?
(ஆ) இதன்மூலம் பாட்டுடைத் தலைவனின் வலிமையும் இரவலர் வறுமையும் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.
(இ) பாட்டுடைத் தலைவனது கொடைச்சிறப்புச் சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

**(அ)**

- பாணாற்றுப்படை / புலவராற்றுப்படை
- பரிசில் வேண்டிச் சென்ற இரவலரை நோக்கி, பரிசில் பெற்றுவந்த இரவலர் கூறியது.

Department of Examinations

(ஆ)

- பாட்டுடைத் தலைவனின் வலிமை - வெற்றி வேலினை உடைய பெருந்தகை
- இரவலர் வறுமை - நிறைந்த பொலிவழிந்த சுற்றமும் கொடிய பசியும் உடையவர்கள்

(இ)

- ஆற்றுப்படுத்துவோர், எதிர்ப்பட்ட இரவலரைவிடப் புல்லியர்களாய் இருந்த தமது முன்னைய வறுமைநிலையையும், பேகனிடம் சென்று பொருள்பெற்ற பின்னர் தாம் அடைந்த செல்வநிலையையும் கூறுவதன் மூலம்

(04 x 03 = 12 புள்ளிகள்)

(ii) விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனண் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.
(இ) இதில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.

(அ)

- கூனியால் மனம் மாறிய கைகேயி, தசரதனது வரவை எதிர்பார்த்து தனது கோலத்தைச் சிதைத்தவேளை.

(ஆ)

- வளரும் தன் புகழாகிய கொடியை வேருடன் அறுத்ததுபோல ஒளிநிறைந்த தனது மேகலாபரணத்தை அறுத்துச் சிதறினாள். கிண்கிணிச் சதங்கைகளோடு கைவளையல்களையும் கழற்றி நீக்கினாள். கூந்தலோடு சேர்ந்தமைந்த ஒளிமிகுந்த நெற்றியிலுள்ள பெறற்கரிய திலகத்தை சந்திரனிலுள்ள களங்கத்தைத் துடைப்பவள்போல் துடைத்து விட்டாள்.

(இ)

**இரு தற்குறிப்பேற்ற அணிகள்**

- தன் புகழை வேரொடு அறுத்தது போன்று மேகலையைச் சிதற எறிந்தாள்.
- சந்திரனுக்கு உரியதாகிய மறுவைத் துடைப்பதுபோல நெற்றித் திலகத்தை அழித்தாள்.

(04 x 03 = 12 புள்ளிகள்)

[12 + 12 = 24 புள்ளிகள்]

Department of Examinations

**2.** (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைநடைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.
ஏர் ஏறாது காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் விளைப்பான் என் ஊரான்.
ஆழத்து நீருக் ககழ்வான் அவன்,
நாற்று
வாழத் தன் ஆவி வழங்குவான், ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்ததுபார்
நன்னெல்லு.

தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும், காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்
முற்றி, மனித முயற்சிக்கு
இறைகொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து
கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச் சொல் உண்டாம் எமக்கு?

அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்
ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்கா முகில், கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல்
'சோ' என்று நள்ளிரவிற்
கொட்டும், உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழும்

ஆட்டத்து மங்கையர் போல்
அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று .....

பின்னர் அது
வற்றியதும், ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோபார், பழையபடி கிண்டுகிறான்.
சேர்த்தவற்றை
முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்.
வாழி அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

Department of Examinations

(i) வரண்ட நிலம் பற்றியும், அதனைத் தன் உழைப்பால் உயிர்ப்பிக்கும் உழவன் பற்றியும் கவிஞர் விபரிப்பனவற்றை விளக்குக.

(ii) மனித முயற்சிக்கு இறை கொடுக்கும் பரிசு பற்றியும், உழைப்பாளியின் மகிழ்ச்சி பற்றியும் கவிஞர் விபரிப்பதில் உள்ள சிறப்பை விளக்குக.

(iii) உழவனின் முழு உழைப்பும் அவனது எதிர்பார்ப்பும் ஒரே இரவில் பறிபோவதை கவிஞர் எவ்வாறு காட்சிப்படுத்துகிறார் என்பதைத் தெளிவுபடுத்துக.

(iv) “இக்கவிதை அதன் நேர்பொருளில் உழவனின் விடாமுயற்சி பற்றியதாயினும், முழுமனித குலத்துக்கும் ஒரு குறியீடாகவும் அமைகின்றது” - கருத்துரை வழங்குக.

**(அ)**

(i)

**வரண்ட நிலம்**

- மப்பன்றி காலமழை காணாத, சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாத மண்.
- உழுது பண்படுத்த முடியாத பாறை போன்ற மண் (ஏர் ஏறாத, காளை இழுக்காத பாறை).
- நிலக்கீழ் நீர், மிகுந்த ஆழத்தில் இருப்பது.

**தன் உழைப்பால் உயிர்ப்பிக்கும் உழவன்**

- அந்தப் பாறை பிளந்து பயன் விளைவிப்பவன்.
- ஆழத்து நீருக்கு அகழ்பவன்.
- நாற்று வாழத் தன் ஆவி வழங்குபவன்.

**(04 புள்ளிகள்)**

(ii)

**மனித முயற்சிக்கு இறை கொடுக்கும் பரிசு**

- இறை கொடுக்கும் பரிசு நெல்லுப்பொதி - அதை பொற்காசாக உருவகப்படுத்தல் ( பொற்காசாம் நெல்லுப்பொதி)
- கதிர் சுமந்து அசையும் நெற்பயிரை தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்கள் கும்மியடிப்பதற்கும் காதினிக்கப் பாடிக் கவலை பறக்கச் செய்வதற்கும் உவமித்தல்.
- அந்தப் பயிரின் அழகை எழுத எம்மிடம் சொல் இல்லை எனல்.

**உழைப்பாளியின் மகிழ்ச்சி**

- உள்ளம் நெகிழ்தல், ஒரு கதிரைக் கொத்தாகக் கிள்ளி முகர்தல் – கிறுகிறுத்துப் போதல்.

**(04 புள்ளிகள்)**

(iii)

- வாடும் பயிருக்கு வார்க்கா முகில், கதிர்கள் சூடும் பயிர்மேல் நள்ளிரவில் ‘சோ’ என்று கொட்டுதல்.
- கொலைக்காற்றும் தானுமாய் எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழுதல்.
- ஆட்டத்து மங்கையர்போல் அங்கு மொய்த்துநின்ற பயிர் பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போதல்.
- கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து வெள்ளம் பயிரை விழுங்குதல்.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations

(iv)

- இக்கவிதை வெளிப்படையாக உழவனையும் அவனது விடாமுயற்சியையும் பற்றியது. மழையற்ற வரண்ட கற்பாறையையும் தன் உழைப்பால் செப்பனிட்டு பயிர் விளையும் பூமியாக மாற்றுவான். மழை இல்லாவிட்டாலும் ஆழக்கிணறு தோண்டி நீர் பாய்ச்சிப் பயிர் விளைவிப்பான். இயற்கை அவனைச் சோதித்தாலும் அவன் துவண்டுவிடாது மீண்டும் தன் பணியைத் தொடங்குகிறான். மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பதன் மூலம் அவனது விடாமுயற்சியையும் அழிவிலிருந்து உயிர்த்தெழுவதையும் கவிஞர் சுட்டுகிறார்.

- இது உழவனைப் பற்றிய கவிதை எனினும் இதன்பொருள் உலகப்பொதுவானது. வெட்டவெட்டத் தளைக்கும் மரம்போல் மனிதகுலம் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும் இயல்புடையது. அவ்வகையில் உழவன் இங்கு ஒரு குறியீடாக அமைகின்றான் எனலாம்.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations

**அல்லது**

(ஆ) சாக்குக்காரன் லெட்சுமியின் கூடையைத் தூக்கினான். அது கல்லாகக் கனத்தது. அடியிற் கையைக் கொடுத்துத் தூக்கித் தட்டில் கொட்டப்பார்த்தான். முடியவில்லை. காலால் மிதித்து அமுக்கப்பட்ட கொழுந்து சிமெந்து மாதிரி இறுகிப்போய் இருந்தது.

மாமுல்படி தன் முழங்காலால் கூடையின் வாயிற்புறத்தை இரண்டு மோது மோதி நாலைந்து தரம் உலுப்பினான். கொழுந்து பிரிந்து கொட்டத் துவங்கியது. கட்டி மண்ணாக பொல பொலவென்று உதிர்ந்து கொட்டிய கொழுந்து தட்டைக் கூடையில் நிரம்பி தராசு அடி தொட்டி எழும்பி கோபுரம் கட்டியதைப் பார்த்ததும் கணக்கப்பிள்ளையைத் திரும்பிப் பார்த்தாள் லெட்சுமி.

ஐயா குவிந்து நின்ற கொழுந்தைப் பார்த்தார். “கொழுந்தா அது நார் பிடித்து வெறும் முற்றல் இலையும் மொட்டைப் புடுங்குமாக இதையெல்லாம் எடுத்திட்டா சரியா? கங்காணியைக் கூப்பிடு” என்றார்.

“என்ன கங்காணி கொழுந்தா இது ... லெட்சுமிக்கிட்ட கொழுந்து இன்னைக்கு எடுக்கவா சொன்னீங்க?”

“ஆமாங்க! ஒம்பதுமணி நிறுவைக்குப் பொறகுவந்து இன்னைக்கு எடுத்துக்காட்ரேன்னு சொல்லிச்சுங்க. சாட்சிக்கு நாலு ஆளைவச்சு எடுக்கச் சொன்னேங்க.”

“சரி ஆனா இப்பிடியா எடுக்கிறது? நாருக்குச்சியும் முத்த எலையுமா, இதா கங்காணி கொழுந்து?”

“துப்பரவுபண்ணி தரச் சொல்றேன். றாத்தலைப் பாருங்க” தராசுமரம் பிடிக்கும் பெண்களைப் பார்த்தார். அந்தப் பெண்கள் தராசில் கயிற்றை மாட்டித் தூக்கினார்கள்.

தூக்கிய கைகள் நடுங்கின. தராசில் றாத்தல் காட்டும் கம்பி ‘ஜம்’ மென்று மேலே ஏறி கீழே இறங்கி ஆடிநின்றது. அறுபத்தி ஒன்று!.

சொன்னதுக்கு மேலாக நான்கு றாத்தல் கூடவே இருந்தது. “அறுவத்தியோர் றாத்தல் இருக்குது. கங்காணியாரு வேணும்னாலும் வந்து பார்த்துக் கொள்ளலாம்.”

ஐயா ஒதுங்கி நின்றார். ஆனால் யாரும் போய்ப் பார்க்கவில்லை. அவ்வளவுக்குத் துணிந்து யார் போவார்கள்?

தராசுமரம் பிடிக்கும் பெண்களின் கரங்கள் நடுங்கத்துவங்கின. தட்டை இறக்கிவைக்கும்படி கையை அமர்த்திவிட்டு கங்காணியைப் பார்த்து ஐயா கூறினார். “ஆனா கங்காணி இந்த அறுவத்தியோர் றாத்தலையும் தரமுடியாது. இருவது றாத்தல் வெட்டப்போறேன். கொழுந்திலே அவ்வளவு பழுது இருக்கு.” லெட்சுமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கங்காணிக்கும் கூடத்தான்.

"ஐயா!" கங்காணிக் கிழவன் வெறித்துப் பார்த்தான். விடுவிடென்று லெட்சுமி அருகில்போய் அவளது வலது கையின் ஆள்காட்டி விரலைப் பிரித்து அவர் முன் காட்டினான். அந்த விரலின் ஓரப்பகுதிகள் இரண்டும் தோல் கிழிந்து இரத்தம் கசிந்து உறைந்து போயிருந்தன!

"இதைப் பார்த்துவிட்டுப் பேசுங்க ஐயா, இது நல்ல கொழுந்தோ கெட்ட கொழுந்தோ, இவ்வளவையும் எடுத்தது இந்தக் கையி! இந்த றாத்தலைத் தரமாட்டேன்னு சொல்றீங்க?

லெட்சுமியின் கைகளைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார். அவர் கை தானாகவே துண்டை வாங்கிக் காலைக் கொழுந்தின் றாத்தலோடு அறுபத்தி ஒரு றாத்தலையும் கூட்டிப் போட்டுத் திருப்பிக் கொடுத்தது.

(i) லெட்சுமியின் கொழுந்துக்கூடை பற்றிய விபரணத்தின் மூலம் ஆசிரியர் உணர்த்துவது யாது?

(ii) கணக்கப்பிள்ளையின் வீம்பும், பிடிவாதமும், மனமாற்றமும் புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(iii) கங்காணி பற்றிய சித்திரிப்பை அடிப்படையாகக் கொண்டு அப்பாத்திரத்தை மதிப்பிடுக.

(iv) இவ்வுரைப் பகுதியில் வெளிப்படும் மலையகத் தமிழின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுக.

**(ஆ)**

(i)

சாக்குக்காரனால் தூக்கமுடியாது கல்லாய்க் கனக்கும் லெட்சுமியின் கூடை, அதில் உள்ள கொழுந்துகளைக் கொட்டுவதற்கு அவன் எடுக்கும் பிரயத்தனம் என்பன பற்றிய விபரிப்பின் மூலம், லெட்சுமி தனக்கு விதிக்கப்பட்ட சவாலை ஏற்று வெற்றிபெற்றுவிட்டாள் என்பதையும், அவளது வைராக்கியத்தையும், அசுர உழைப்பையும், தன்மான உணர்வையும் ஆசிரியர் வாசகருக்குப் பூடகமாக உணர்த்த முயல்கிறார் எனலாம்.

**(04 புள்ளிகள்)**

(ii)

கணக்கப்பிள்ளை முதற்பார்வையிலேயே லெட்சுமியின் உழைப்பை நிராகரித்து, 'கொழுந்தா இது' என்று எடுத்தெறிந்து பேசுவது, கொழுந்து நிறுத்ததன் பின்னர், 'இந்த அறுவத்தியோர் றாத்தலையும் தரமுடியாது இருபது றாத்தல் வெட்டப் போகிறேன்' என்று சொல்வது. இதன் மூலம் அவரது வீம்பும் பிடிவாதமும் புலப்படுத்தப்படுகின்றன. லெட்சுமியின் இரத்தம் காய்ந்த விரல்களைக் காட்டி கங்காணி பரிந்துரைத்த பின்னர் மறுபடியும் திரும்பிநின்று முழு நிறையையும் போட்டுக் கொடுப்பதன் மூலம் அவரது மனமாற்றம் புலப்படுத்தப்படுகின்றது.

**(04 புள்ளிகள்)**

(iii)

கங்காணி இரக்கமும் கருணையும் உள்ள ஒரு பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். 'மோசமான கொழுந்து' என்று கணக்கப்பிள்ளை ஏசியதும் 'சுத்தப்படுத்தித் தரச் சொல்கிறேன் றாத்தலைப் பாருங்க' என்பது, 'இருபது றாத்தல் வெட்டப்போறேன்' என்று கணக்கப்பிள்ளை சொன்னதும் லெட்சுமியின் விரல்களை அவருக்குக் காட்டி அவளுக்காக வாதாடுவது - இவை லெட்சுமிமீது அவர் கொண்ட அன்பையும் அவரது நேர்மையையும் உணர்த்துகின்றன. கங்காணி நீதி உணர்ச்சியுள்ள ஒரு பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

**(04 புள்ளிகள்)**



Department of Examinations

(iv)

- இலங்கையில் வழங்கும் பல்வேறுபட்ட பேச்சுத் தமிழில் மலையகத் தமிழும் தனக்கென்று சில தனித்துவப் பண்புகளைக் கொண்டுள்ளது. அதில் சில அம்சங்கள் இவ்வுரைப் பகுதியில் காணப்படுதல்.
- மலையகத்துக்கே உரிய விசேட வழக்குச் சொற்கள்.
  உதாரணம் : சாக்குக்காரன், கொழுந்துக் கங்காணி, கணக்கப்பிள்ளை, மொட்டைப்புடுங்கு, நாருக்குச்சி, றாத்தல், தராசுமரம்,
- '-ங்க' என்ற மரியாதை விகுதியின் பயன்பாடு
  உதாரணம் : ஆமாங்க, சொல்லிச்சுங்க, சொன்னேங்க

**(04 புள்ளிகள்)**

**[04 x 4 = 16 புள்ளிகள்]**

**3.** **வினைத்திட்பம்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்

(அ) வினைத்திட்பம் பற்றிய வரையறை, அதன் பகுதிகள்
(ஆ) வினைத்திட்பத்தின் அருமை, சிறப்பு, அதனால் எய்தும் பயன்
(இ) வினைத்திட்பம் உடையாரை அறியும் வகை, அவர்கள் வினையாற்றும் வகை
(ஈ) வினைத்திட்பம் இல்லாதாரது இழிவு

என்பனபற்றிக் கூறியுள்ளவற்றை விளக்குக.

**(அ)**

**வினைத்திட்பம் - வரையறை**

- ஒருவன் மேற்கொள்ளும் செயலை தப்பாமல் முடித்தற்குரிய மனத்திண்மையே வினைத்திட்பமாகும்.

**அதன் பகுதிகள்**

- பயனற்ற காரியங்களைச் செய்யாமையும் தெய்வத்தால் இடையூறு ஏற்படுமிடத்து அதற்கு மனந்தளராமையும்.
- செய்யும் வினையை முடிவில் வெளிப்படுமாறு மறைவாகச் செய்வதே வலிமையாகும். அவ்வாறில்லாமல் இடையே அச்செயல் வெளிப்படுமாயின் அது துன்பத்தைக் கொடுக்கும்.

**(06 புள்ளிகள்)**

**(ஆ)**

**வினைத்திட்பத்தின் அருமை**

- இத்தொழிலை இவ்வாறு செய்வோம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளிது. அச்செயலை சொன்னபடி செய்தல் எவர்க்கும் அரிது.

**வினைத்திட்பத்தின் சிறப்பு**

- அமைச்சர்களது வினைத்திட்பமானது அரசனுக்குப் புகழை உண்டாக்குவதால் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும்.

**பயன்**

- ஒரு செயலை செய்து முடித்தற்குரிய மனவுறுதி உடையவர்கள், தாம் அடைய நினைத்த யாவற்றையும் நினைத்தவாறே எய்துவர்.

**(06 புள்ளிகள்)**

Department of Examinations

**(இ)**

**வினைத்திட்பம் உடையாரை அறியும் வகை**

- வடிவாற் சிறியவரும் முக்கியமான பெரும் செயலைச் செய்யும் ஆற்றல் உடையவராக இருப்பர். ஆகையால், உருவத்தைக் கண்டு இகழலாகாது.

**அவர்கள் வினையாற்றும் வகை**

- செய்யத் துணிந்த வினையை நன்கு எண்ணி, காலந்தாழ்த்தாது தளர்ச்சியின்றிச் செய்தல் வேண்டும்.
- ஒருவன் செய்யத்தொடங்கிய செயலில் துன்பங்கள் மிகுதியாக வந்தாலும் துன்பத்தைக் கருதி, அச்செயலைக் கைவிடாது மனவுறுதியுடன் முடிவில் இன்பம் தரும் வகையில் செயலாற்ற வேண்டும்.

**(06 புள்ளிகள்)**

**(ஈ)**

- படை, அரண், நட்பு முதலிய திட்பங்களை உடையவராயினும் மன உறுதி இல்லாதவரை உலகத்தவர் மதியார்.

**(02 புள்ளிகள்)**

[06 + 06 +0 6 + 02 = 20 **புள்ளிகள்**]

Department of Examinations

**4.** கைகேயி சூழ்வினைப் படலத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன கம்பராலே சித்திரிக்கப்படுமாற்றைத் துலக்குக.

(அ) சுமந்திரனால் அழைத்துவரப்பட்ட இராமன் கைகேயியைப் பணியுமாறு
(ஆ) தசரதனது ஆணையைக் கைகேயி தெரிவிக்குமாறு
(இ) அதனை இராமன் எதிர்கொண்டவாறு
(ஈ) கைகேயியிடம் அவன் விடைகொள்ளுமாறு (20 புள்ளிகள்)

**(அ)**

- தாய்ப் பசுவைக் கண்ட கன்றுபோல் மகிழ்தல்.
- தலை நிலத்திற் படும்படியாக வணங்குதல்.
- வாய்பொத்தி நிற்றல்.
- ஆடையை ஒதுக்கிப் பணிந்து நிற்றல்.

**(05 புள்ளிகள்)**

**(ஆ)**

- "தந்தையார் உனக்குச் சொல்லச் சொன்னதோர் செய்தி உண்டு" என இரும்பு மனத்தோடு கூறுதல்.
- "பரதன் நாடாளவேண்டும், பதினான்கு ஆண்டுகள் நீ வனவாசம் செய்யவேண்டும்" எனல்.
- வனவாசம் செய்யச் சொன்னமைக்கான காரணங்களை, சடைதாங்கி, தவம் மேற்கொண்டு புண்ணியத்துறை ஆடுதல் முதலாகத் தானே கற்பித்துக் கூறுதல்.
- "இயம்பினன் தந்தை" எனக்கூறாது, அரச ஆணையாக, "இயம்பினன் அரசன்" எனல்.

**(05 புள்ளிகள்)**

(இ)

- கைகேயியின் வார்த்தைகளைக் கேட்ட இராமனின் முகச்செவ்வி, அப்போது மலர்ந்த செந்தாமரையை வெல்லுமளவு இருத்தல்.
- தசரதனது வேண்டுதலை மறுக்கமாட்டாமல் அரசபாரம் சுமக்கத் தயாரான இராமன், கைகேயி வார்த்தையால் அதிலிருந்து விடுதலைபெற்றதாக மகிழ்தல்.
- வண்டியில் பூட்டப்பட்ட எருதை, கருணை உடைய ஒருவன் அவிழ்த்துவிடும்போது அவ்வெருது பெறும் மகிழ்ச்சியை ஒத்த மகிழ்ச்சியை இராமன் அடைதல்.

**(05 புள்ளிகள்)**

(ஈ)

- "தந்தையாகிய அரசனின் கட்டளை அல்லவெனினும், அன்னையே! நின் கட்டளை என்றாற் கூட நான் நிறைவேற்றுவேன்" எனக் கூறுதல்.
- "பின்னவனாகிய பரதன் பெற்றசெல்வம் நான் பெற்றது அல்லவா" எனல்.
- "தங்கள் பணி தலைமேற்கொண்டு, இன்றே கானகத்துக்குப் போகிறேன்" எனல்.
- "இப்பொழுதே விடைகொள்கின்றேன்" எனல்.
- கைகேயி பாதம் வணங்கி, தந்தையின் திசைநோக்கித் தொழுது விடைகொள்ளுதல்.

**(05 புள்ளிகள்)**

[05 × 4 = 20 புள்ளிகள்]

5. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் **நகைப்பூங்கொத்து** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) 'நகைப்பூங்கொத்து' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு
   (ஆ) தாயின் குணநலன் சித்திரிக்கப்படும் விதம்
   (இ) காதல் வயப்பட்ட தலைவியின் மனநிலை
   (ஈ) பண்டிதமணியின் உரைநடையின் சிறப்பியல்புகள் (20 புள்ளிகள்)

(அ)

- பலவிதமான நகைப்புகள் சேர்ந்து கொத்தாக இருப்பதுபோல தலைவனின் நகைப்பு பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருப்பதனாலும், சம்பவத்தின் முக்கிய அம்சமாக அது இருப்பதனாலும் நகைப்பூங்கொத்து என்னும் தலைப்பு கட்டுரைக்குப் பொருத்தமாக அமைகிறது.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

**இரக்கம் உள்ளவள்**

- நீர் கேட்டு வந்தவனுக்கு உதவ மகளை ஏவுதல்.
- நீர் விக்கிய தலைவனின் முதுகைப் பரிவுடன் தடவுதல்.

**மகள் மீதான பாசம்**

- மகளின் அலறலைக் கேட்டுப் பதை பதைப்புடன் ஓடிவருதல்.
- அவளுக்கு ஆபத்தென எண்ணியதால் ஏற்பட்ட துன்பமும் நேரில் உண்மையை அறிந்தபோது ஏற்பட்ட ஆறுதலும்.
- அப்பாவித்தனம்.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations

**(இ)**

- தலைவனிடம் உள்ளூரக் காதலுடையவளாக இருத்தல். ஆயினும், அக்காதலை வெளிப்படையாகக் கூறாமை.
- தலைவன் தன் கையைப் பற்றிப் பிடித்ததும் அலறுதல், அவளது அலறல் கேட்டு வந்த தாய்க்கு உண்மையை மறைத்தல்.
- தலைவனின் கடைக்கண் நோக்கினையும் நகைப்பினையும் நினைத்து நினைத்து இரசித்தல் / விரும்புதல்.

**(05 புள்ளிகள்)**

**(ஈ)**

- நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்தும் பாங்கு
- நாடகப் பாங்கு
- கதைகூறும் பாங்கு
- நகைச்சுவை விரவிவரல்
- சிறிய சிறிய வசனம்
- எளிமை

**(05 புள்ளிகள்)**

**[05 x 4 = 20 புள்ளிகள்]**

Department of Examinations

**6.** செ.கணேசலிங்கனின் **நீண்டபயணம்** நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) யாழ்ப்பாண சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்கொண்ட துயரங்கள்
(ஆ) சமூக அரசியல் உரிமைகளைப் பெறும் பொருட்டு அவர்கள் மேற்கொண்ட போராட்டங்கள்
(இ) வள்ளி என்ற கதாபாத்திரத்தின் குணவியல்பும் அப்பாத்திரம் கதை வளர்ச்சிக்கு உதவுமாறும்

**(அ)**

- அடிப்படை வசதிகளற்ற வாழ்க்கை நிலை.
- சாதிய அடக்குமுறை:
  - தீண்டாமை : கோயிற்பிரவேச மறுப்பு, பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளத் தடை, உயர்சாதி வீடுகளில் தனியான பாத்திரங்களைப் பயன்படுத்தல், தேநீர்க் கடைகளில் சமத்துவ மறுப்பு, தாம் விரும்பியவாறு வாழ முடியாமை (உடை அணிதல், பெயரிடுதல்.)
  - உடல், உளத் தாக்கங்களுக்கு உள்ளாதல்.
  - கல்வி மறுப்பு
  - உழைப்புச் சுரண்டல்

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

- கோயில் நடைமுறைகளில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மீற முற்படுதல்.
- நல்லானின் இறப்பின்போது ஒன்றிணைந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தல்.
- தொழிலாளரைத் தண்டித்தல், வேலை நீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கு எதிராக தொழிற்சங்கம் மூலம் போராடுதல்.
- கிராமச்சங்கத் தேர்தலில் தமக்கான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ள ஒன்றிணைந்து போராடுதல்.

**(06 புள்ளிகள்)**

**(இ)**

**குணவியல்புகள்**

- குழந்தைச் சுபாவம் கொண்டவள்.
- செல்லத்துரையன்மீது அளவற்ற அன்பு கொண்டவள்.
- செல்லத்துரையனது மனமறிந்து நடப்பவள்.

**கதை வளர்ச்சிக்கு உதவுதல்**

- செல்லத்துரையனின் குணவியல்புகள் வெளிப்படுவதற்குக் காரணமாக அமைதல்.
- செல்லத்துரையனது நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக அமைதல்
- ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒருங்கிணைவை ஏற்படுத்தும் பாத்திரமாக அமைதல்.

**(06 புள்ளிகள்)**

[08 + 06 + 06 = 20 **புள்ளிகள்**]

Department of Examinations

7. மருதூர்க்கொத்தனின் ஒளி சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன பற்றிக் கருத்துரை வழங்குக.
   (அ) அப்துல் கரீம் என்ற பாத்திர உருவாக்கம்
   (ஆ) மீனவர் குடும்பத்தின் வறுமை பற்றிய சித்திரிப்பு
   (இ) கதையின் முடிவு
   (ஈ) ஆசிரியரின் மொழிநடை (20 புள்ளிகள்)

**(அ)**

- தன்னம்பிக்கையும் துணிவும் இறைபக்தியும் குடும்பப் பொறுப்பும் மிக்க ஏழை மீனவன்.
- வறுமைத்தீயின் பசித்த நாக்குகளுக்கு இரையாகும் குடும்பத்தில் வசந்தம் சிரிக்கும் என்று நம்புபவன்.
- சட்டவிரோதமாக மீன்பிடித்த தனது பழைய வாழ்க்கையை மறந்து, நேர்மையாகத் தொழில் செய்து வாழ முனைபவன்.
- தனது மகளின் வாழ்வுக்காக அதை மீறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானவன்.
- கையில் டைனமைற் வெடித்து விரல் சிதைந்தாலும் தொடர்ந்து முயலும் ஓர்மம் கொண்டவன்.

**(05 புள்ளிகள்)**

**(ஆ)**

- "வாழ்க்கை எனும் கொல்லன் கொப்பரையில் கொழுந்து தள்ளும் வறுமைத் தீயின் பசித்த நாக்குகளுக்கு இரையாகும் குடும்பம்" என்ற வருணனை மீனவக் குடும்பத்தின் வறுமையின் ஆழத்தைப் புலப்படுத்துதல்.

- குடிசை பற்றிய விவரணம்
  - எலிவளைகளாக இரு அறைகளைக் கொண்ட குடிசை.
  - குளிருக்குப் பாதுகாப்பாகச் சாரத்தால் மூடிக்கொண்டு கிடத்தல்.
  - தூக்கத்தில் பசியை மறத்தல் (பசியின் அழுங்குப் பிடியில் வெறி முற்றிவிட்ட புலியின் நகங்களாக மனத்தை வராண்டும் அவசங்களையும் குசேலகாண்டப் பாராயணத்தையும் மறந்து துயில்தல்.)
  - ஒட்டுத் திண்ணையில் ஈர விறகுகளோடு நடத்திய மடைப்பள்ளிப் போர்.

- ஊசல் மணக்கும் ஊசலரிசிப் பழஞ்சோறும் சூடுகாட்டிய மட்டிச்சதைப் பழங்கறியும் நிசிக்குளிரில் கரும்பாக – கடைந்தெடுத்த அமுதாக உண்ணல்.

- மகளைக் கரைசேர்ப்பதற்காக பணம் தேடவேண்டிய நிர்ப்பந்தம்.

**(05 புள்ளிகள்)**

**(இ)**

- கதை திடீரென முடிகின்றது. முதல் வெடியில் கரீமின் கை விரல்கள் சிதைவடைகின்றன. அதைப்பொருட்படுத்தாது வலக்கையால் மற்ற வெடியைப் பிடித்துக்கொள்ள மகன் தீப்பெட்டியை உரசிக் குச்சியைப் பற்றவைப்பதுடன் கதை முடிகின்றது.
- கரீம் தன் முயற்சியில் வெற்றிபெற்றானா, இல்லையா என்று ஆசிரியர் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதை வாசகனின் யூகத்துக்கே விட்டுவிட்டார்.
- கடலில் சூரியன் எழும் காட்சி அவனின் வெற்றியைப் பூடகமாக உணர்த்துவதாகக் கொள்ளலாம். அல்லது தகப்பனும் மகனும் கடல்நீரில் அமிழ்ந்து போனார்கள் என்றும் கருதலாம்.
  "அந்த வல்ல பெரிய றகுமான் முகம் பார்ப்பான்" என்ற கரீமின் நம்பிக்கை பலித்ததாகக் கொள்வது பொருத்தமாக இருக்கும். "ஒளி" என்ற கதையின் தலைப்பும் அதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations

**(ஈ)**

- பெரிதும் காவியப்பாங்கான ஒரு செவ்வியல் நடையை ஆசிரியர் பயன்படுத்துகின்றார். நிறை வருணணைகள், உவமைகள், உருவகங்கள்.
  ( உ-ம் ) மலையிடை இழியும் அருவியின் வேகத்தில் மையிருட் கனதியைக் குடைந்து நடக்கிறான் அப்துல்கரீம், அக்கினிப் பாளமாகத் தகிக்க வேண்டிய அயனப் பிரதேசம், வாழ்க்கை எனும் கொல்லன் கொப்பரை, கும்பகர்ணவரம், குசேலகாண்டப் பாராயணம்.
- இஸ்லாமியரின் வழக்குத் தமிழ்ப் பயன்பாடு.
  (உ-ம்) அந்த வல்ல பெரிய றகுமான், யாமுகியித்தீன், என்னவாப்பா போன்றவை.

**(05 புள்ளிகள்)**
**[05 x 4 = 20 புள்ளிகள்]**

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்ற செய்யுளில் முன்வைக்கப்படும் வாழ்க்கை விழுமியங்கள்
(ஆ) பெரியாழ்வாரது **வெண்ணெயளைந்த** என்னும் பதிகத்தில் வெளிப்படும் கண்ணனின் குறும்புகள்
(இ) தேம்பாவணி **பைதிரம் நீங்கு படலத்தில்** தேவதூதன் வாய்மொழி கேட்ட சூசையும் மரியாளும் அடைந்த துயரம்
(ஈ) சீறாப்புராணம் **மழை அழைப்பித்த படலத்தில்** முஹம்மது நபி(ஸல்) அவர்களின் புகழ்

**(அ)**

- எல்லா ஊரும் எங்கள் ஊர்தான், எல்லோரும் எங்கள் உறவினர் தான்.
- நன்மையும் தீமையும் பிறரால் வருபவை அல்ல.
- துன்பமும் அதன் தீர்வும்கூட பிறரால் ஏற்படுவதில்லை. நாமாகவே தேடிக்கொள்கின்றோம்.
- வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து வாழ வேண்டும்.
- ஊழ்வினைப்படியே வாழ்க்கை அமைகின்றது.
- பெரியவர்களை வியத்தலும் சிறியவர்களை இகழ்வதும் தேவையற்றவை.

**(10 புள்ளிகள்)**

(ஆ)

- எண்ணெய்க் குடத்தை உருட்டுதல்.
- நித்திரை செய்கின்ற குழந்தையைக் கிள்ளி எழுப்புதல்.
- கண்ணைப் புரட்டி விழித்துப் பார்த்தல்.
- பசுக்கன்றின் வாலில் ஓலையைக் கட்டிவிடுதல்.
- மாட்டுத் தொழுவத்தினுள் நுழைந்து, கையால் புழுதி அளைந்து அழுக்கு மேனியோடு காணப்படல்.
- உறிமேல் வைத்த எண்ணெயைத் திருடி உண்ணல்.

**(10 புள்ளிகள்)**

(இ )

- நெருப்பில் மூழ்கிய பசுமையான பூந்தாது போலவும் வேல் கண்ணில் பாய்ந்தது போலவும் புண்ணின் துவாரத்துள் செந்தீ நுழைந்தது போலவும் இடியால், கூற்றுவனால் தாக்குண்டது போலவும் கொடுஞ்சொல் கேட்ட சூசை துயரமடைதல்.
- தனக்கு அறிமுகமானவர்கள் இல்லாமை; உறவினர் இல்லாமை; அறவுணர்ச்சி கொண்டவர் இல்லாமை; செல்லும் வழிதெரியாமை; வழியைக் கடந்து செல்லக்கூடிய துணை இல்லாமை; வழியில் செலவு செய்ய பொன் இல்லாமை ஆகிய துன்பங்களை நினைத்து வருந்துதல்.
- குழந்தை யேசு, மெல்லியளான மரியாள் இருவரும் அடையும் துன்பத்தைக் கருத்திற்கொண்டு புலிவாய்ப்பட்ட மான் போல சூசை ஏங்குதல்.
- சூசை மூலம் செய்தியை அறிந்த மரியாள், தீயிலகப்பட்ட பூங்கொத்துப்போல வாடினாள்.

**(10 புள்ளிகள்)**

( ஈ )

- குளிர்ந்த சந்திரனைப் போல் கருணை செய்தவர்.
- ஒப்பில்லாத இறைவனின் இறுதித் தூதுவர்.
- கீர்த்திசேர் வள்ளல்.
- பஞ்சத்தில் ஏற்பட்ட கொடுமைகளை சுலைக்கு சொல்லக் கேட்டு, இரக்கமுற்று பாரில் வருத்தங்கள் நீங்கப் பிரார்த்தித்தவர்.
- மழையினால் ஏற்பட்ட சேதங்களை நீக்கக்கூடியவர்.
- தருமத்தினின்றும் தவறாதவர்.
- சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்.
- தரும அறிவும் ஒழுக்கமும் பொறையும் தயவும் ஒருங்கே கொண்டவர்.
- மேகம் அகன்று சூரியன் தோன்றும் வண்ணம் பிரார்த்தித்தவர்.

**(10 புள்ளிகள்)**

**[10 × 02 = 20 புள்ளிகள்]**

Department of Examinations

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
# தமிழ் II
# புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | **இலக்கணம்** | | | |
| | அ. | 01 × 20 | = 20 புள்ளிகள் | |
| | ஆ. | 02 × 05 | = 10 புள்ளிகள் | **30 புள்ளிகள்** |
| 02. | அ. | சுருக்கம் | = 10 புள்ளிகள் | |
| | ஆ. | கிரகித்தல் | = 10 புள்ளிகள் | **20 புள்ளிகள்** |
| 03. | கட்டுரை | | | |
| | | பொருள் | = 08 புள்ளிகள் | |
| | | மொழிநடை | = 08 புள்ளிகள் | |
| | | அமைப்பு | = 04 புள்ளிகள் | **20 புள்ளிகள்** |

## பகுதி II பிரிவு (அ) (ஏதாவது ஒன்று)

| | | | |
|---|---|---|---|
| 04. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 05. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 06. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |

## பிரிவு (ஆ) (ஏதாவது ஒன்று)

| | | | |
|---|---|---|---|
| 07. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 08. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : .................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி II இன் 'அ' பிரிவிலிருந்து **ஒரு** வினாவையும் 'ஆ' பிரிவிலிருந்து **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி I இல் முதலாம் வினாவின் 'அ' பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர்
(1) அ (2) ஐ (3) வ் (4) ம் (5) ன் (..**3**..)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி
(1) ப் (2) உ (3) ஞ் (4) ம் (5) ண் (..**4**..)

1.3 வேற்றுநிலையாக மட்டும் மயங்கும் எழுத்து
(1) க் (2) ட் (3) ச் (4) ர் (5) ள் (..**4**..)

1.4 குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்
(1) பசுக்கூட்டம் (2) பேசுபொருள் (3) நெஞ்சுக்குள்
(4) விருந்துபசாரம் (5) விட்டுக்கொடு (..**3/4**..)

1.5 இயல்புப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) மக்களால் (2) என்னால் (3) கத்தியால்
(4) மிருகத்தால் (5) உழைப்பால் (..**1**..)

1.6 'இன்' என்னும் இறந்தகால இடைநிலை இடம்பெறும் சொல்
(1) ஓடியது (2) போனான் (3) பாடினான்
(4) சென்றான் (5) கண்டான் (..**3**..)

Department of Examinations

1.7 ஒன்றுக்கு மேற்பட்ட துணைவினைகளைக் கொண்டமைந்த சொல்
(1) கோபித்துக்கொண்டான்
(2) கேட்டுப்பார்த்தேன்
(3) எதிர்பார்த்திருந்தேன்
(4) தூங்கிக்கொண்டிருந்தேன்
(5) மூடிவிட்டான் (..4..)

1.8 சாரியை **பெறாது** புணர்ந்த சொல்
(1) வீட்டினை (2) வீட்டினது (3) வீட்டினில் (4) வீட்டினால் (5) வீட்டிலிருந்து (..5..)

1.9 'ஒழுங்காகக் கற்பதன் பயனை வருங்காலத்தில் உணர்ந்து கொள்வோம்' இங்கு கற்பது என்பது
(1) வினையாலணையும் பெயர்
(2) வினையெச்சம்
(3) காலம் காட்டும் தொழிற்பெயர்
(4) பெயரடை
(5) அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று (..3..)

1.10 உடைமைப்பொருள் உணர்த்தும் படர்க்கைப் பெயர்
(1) தாம் (2) தன் (3) தமக்கு (4) தன்னால் (5) தம்மிடம் (..2..)

1.11 வினையாலணையும் பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) அந்த வேளையில் வந்தது பெரும் உதவியாய் அமைந்தது.
(2) வளவுக்குள் கட்டாக்காலிகளாக வந்தவற்றைத் துரத்திவிட்டேன்.
(3) இன்று முழுவதும் மழை வருவதும் போவதுமாய் உள்ளது.
(4) ஊருக்குள் புகுந்த யானைகள் பயிர்களை நாசம் செய்தன.
(5) அவர் வருவார் வருவார் என்று வாசலில் காத்திருந்தேன். (..2..)

1.12 பெயரடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) ஆட்சி (2) உயர்ச்சி (3) மகிழ்ச்சி (4) பேய்ச்சி (5) காட்சி (..4..)

1.13 கால இடைநிலை இன்றி, காலம் உணர்த்தும் வினைமுற்று
(1) வந்தது (2) போனது (3) படிக்கிறான் (4) படிப்பான் (5) போகும் (..5..)

1.14 தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையக்கூடியது
(1) பிடி (2) முடி (3) குடி (4) அடி (5) நடி (..2..)

1.15 'பசித்தவர்களுக்கு உணவு கொடுத்ததால் வந்த திருப்தி' - இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமைகள், முறையே
(1) செயப்படுபொருள், கொடை, கருவி
(2) கொடை, காரணம்
(3) எழுவாய், கொடை, அடைதல்
(4) கொடை, செயப்படுபொருள், காரணம்
(5) கொடை, செயப்படுபொருள் (..4..)

1.16 'தொலைந்துபோன ஆடு எங்கே போய்ச்சேர்ந்திருக்கும் என்ற சிந்தனை அவனது மூளையைக் குடைந்து கொண்டிருந்தது.'
மேற்படி வாக்கியத்தின் எழுவாய்த் தொடர்
(1) அவன்
(2) தொலைந்து போன ஆடு
(3) ஆடு
(4) அவனது மூளை
(5) தொலைந்துபோன ஆடு எங்கே போய்ச் சேர்ந்திருக்கும் என்ற சிந்தனை (..5..)

Department of Examinations

1.17 செயப்படுபொருள் குன்றாத வாக்கியம்
(1) பரீட்சை நெருங்குவதால் அவள் கவனமாகப் படிக்கிறாள்.
(2) அவன் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்குச் சென்றான்.
(3) அவன் பஸ்ஸை எதிர்பார்த்தபடி நெடுநேரமாக நின்றான்.
(4) அவள் தனது எதிர்காலம் குறித்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.
(5) அவன் தன் இலட்சியத்தை அடையும் நோக்கில் தொடர்ந்து முயல்கிறான். (..1...)

1.18 'மாட்டு' என்ற இடைநிலையைக் கொண்டு எதிர்மறையாக மாற்றத்தக்க வினைமுற்றைக் கொண்ட வாக்கியம்
(1) நாளைக்குக் கட்டாயம் வரவேண்டும்.
(2) எப்போதும் அவன் எனக்கு நல்ல நண்பனாக இருப்பான்.
(3) நான் இப்போதுதான் வந்துகொண்டிருக்கிறேன்.
(4) அவர்கள் படிப்பில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள்.
(5) சென்ற வாரம் நான் ஊருக்குச் சென்றேன். (..2...)

1.19 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவத்தால் இணைக்கக்கூடிய முற்று வாக்கியங்களின் தொகுதி
(1) அவன் ஊருக்குச் சென்றான்;
அவன் தன் பெற்றோரைப் பார்த்து வந்தான்.
(2) அவன் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை;
அவன் ஒழுங்காகப் படிப்பதில்லை.
(3) இந்த உணவு மிகவும் சுவையானது;
இந்த உணவை நான் விரும்பி உண்பேன்.
(4) நான் கட்டுரை ஒன்றை எழுதினேன்;
அவன் அந்தக் கட்டுரையைத் தட்டச்சுச்செய்து தந்தான்.
(5) அவனது வருமானம் குடும்பச் செலவுக்கே போதாது;
அவன் தன் பிள்ளைகளை நன்கு படிக்கவைக்கிறான் (..4...)

1.20 மரபுத்தொடர் அமையப்பெற்ற வாக்கியம்
(1) பெரிய மீன் வரும் என்ற எதிர்பார்ப்போடு கொக்கு ஒற்றைக் காலில் நிற்கிறது.
(2) விபத்தில் ஒரு காலை இழந்தாலும் ஒற்றைக்காலோடு பாடுபட்டு உழைக்கிறான்.
(3) தான் கேட்டதைப் பெற்றோர் வாங்கித்தர வேண்டும் என்று அவன் ஒற்றைக்காலில் நிற்கிறான்.
(4) சுவரில் ஒரு காலை ஊன்றியபடி ஒற்றைக்காலில் நிற்கிறான்.
(5) சக்தி மிக்க ஆயுதத்தைப் பெறுவதற்காக அருச்சுனன் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தான். (..3...)

(20 புள்ளிகள்)

**

**[01 × 20 = 20 புள்ளிகள்]**

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி **I** இல் உள்ள **I** ஆம் வினாவின் 'ஆ' பிரிவுக்கும் **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

✳ பகுதி **II** இல் 'அ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. மூக்கொலி என்றால் என்ன? தமிழில் வழங்கும் மூக்கொலிகளைத் தருக.
2. கூட்டுப் பெயர்கள் அமையுமாற்றினை உதாரணம் தந்து விளக்குக.
3. தன்மை வினைமுற்று விகுதிகளையும் முன்னிலை வினைமுற்று விகுதிகளையும் குறிப்பிடுக.
4. உடைமை வேற்றுமையை உதாரணம் தந்து விளக்குக.
5. உம் இடைச்சொல் எச்சப் பொருளிலும் ஐயப்பொருளிலும் வருவதற்கு ஒவ்வோர் உதாரண வாக்கியம் தருக.

(10 புள்ளிகள்)

**(ஆ)**

1.

- காற்றை வாய்க்குள் தடைசெய்யாமல் மூக்கின் வழியாக வெளிச் செல்லவிட்டு ஒலிக்கும் ஒலிகள்.

  – ங், ஞ், ண், ந், ம், ன்.

2.

- **பெயர் + பெயர் = பெயர்**

  வானம் + வில் = வானவில்

  **வினை + பெயர் = பெயர்**

  வளர் + மதி = வளர்மதி

  **இடை + பெயர் = பெயர்**

  முன் + உரை =முன்னுரை

- இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களை ஒன்றோடு ஒன்று இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச் சொற்கள் கூட்டுப்பெயர் எனப்படும்.

Department of Examinations

3.

தன்மை வினைமுற்று விகுதிகள் : - ஏன், - ஓம்

முன்னிலை வினைமுற்று விகுதிகள் : - ஆய், - ஈர், - ஈர்கள்

4.

மணியது ஓசை
எனது புத்தகம்
என்னுடைய வீடு

} இவை போன்ற பொருத்தமான உதாரணங்கள்

- உருபு : அது
- சொல்லுருபு : உடைய

5.

எச்சப்பொருள் : அவனும் வந்தான்

ஐயப்பொருள் : மழை பெய்தாலும் பெய்யும்

(இவை போன்ற பொருத்தமான உதாரணங்கள்)

(02 × 5 = 10 புள்ளிகள்)

**[20 +10 = 30 புள்ளிகள்]**

Department of Examinations

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

உலகினில் மக்கள் வாழ்வினுக்கு இன்றியமையாத உண்மைப் பொருள்களைச் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினியவாகிய அழகிய சொற்களால் இலக்கணவமைதி குன்றாது திறம்பட எடுத்துச் சொல்லுவோனே கவிஞன் எனப்படுவான். இத்தகைய கவிஞர் செய்த தனிச்செய்யுள்களும் பிரபந்தங்களும் தொகை நூல்களும் காவியங்களும் தமிழிலக்கியப் பரப்பிலே இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாவண்ணம் விளங்குகின்றன. இவற்றைவிடக் கிராமப் புறங்களிலே கல்வியறிவு கைவரப்பெறாத மக்கள், தினந்தோறும் உடல் வருந்த வேலை செய்தலால் வரும் இளைப்பு முதலியன நீங்குதற் பொருட்டுத் தம் மனதுக்குகந்த பாட்டுக்களைப் பாடியாடி மகிழ்வர். அவை சாதாரண மக்களின் உணர்ச்சி வேகத்தாற் பாடப்பட்டனவன்றிப் புலமையினாற் பாடப்பட்டனவல்லவாகையால் அவற்றைப் பண்புசால் புலவர்கள் பண்பட்ட பாடல்களெனக் கொள்ளார். எனினும் மக்கள் உடல் வருத்தத்தைத் தீர்த்து மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வல்லனவாகலின் அவை உயிருள்ள பாடல்கள் எனக் கொள்ளல் பொருந்தும். இத்தகைய உயிருள்ள பாடல்கள் நாட்டுப் பாடல்கள் என வழங்கப்படும். அவை ஓசை நயமும் தாளவமைதியும் மிகுதியும் பொருந்தியவையாய்க் கேட்போர் செவிக்கின்பம் பயப்பனவாய் விளங்கும்.

நாட்டுப்பாடல்கள் பெரும்பாலும் எழுத்து வழக்கில் இல்லை. வயலில் உழவு தொழில் செய்வோரும் நாற்று நடுவோரும் அரிவி வெட்டுவோரும் சூடு அடுக்குவோரும் சூடு மிதிப்போரும் கிணற்றிலிருந்து நீர் இறைப்போரும் நெல் முதலிய தானியங்களைக் குற்றுவோரும் வண்டி ஓடம் முதலியன செலுத்துவோரும் தங்கள் உடல் வருத்தத்தை மனச்சந்தோஷத்தாற் போக்க எண்ணிப் பாடும் பாட்டுக்களே நாட்டுப் பாடல்கள் எனப்படும். இவற்றை வழிமுறை வழிமுறையாக அத் தொழில் செய்கின்றவர்கள் பாடிக் கொண்டுவந்தனர். புத்தகங்களில் எழுதப்படாமலே அப்பாடல்கள் நாட்டுமக்களிடையே வழங்கி வருகின்றன. இந்நிலை நிலவுமாயின் காலகதியில் நாட்டுப்பாடல்களின் தொகை மிகவும் குறைந்து கொண்டேபோகும். அதனால், பல அறிஞர்கள் நாட்டுப் பாடல்களைச் சேகரித்து வருகின்றனர்.

ஒரு நாட்டு மக்களின் இயல்பான பண்பாட்டை அந்நாட்டு மக்கள் பாடிவரும் எழுதாப் பாடல்களாகிய நாட்டுப் பாடல்களால் அறியலாம். அன்றி, ஏனைய சிறந்த இலக்கியங்களால் அவ்வளவு திட்டமாக அறியமுடியாது. பண்பட்ட கல்வியறிவு நிரம்பிய நுண் புலவர்களால் யாக்கப்பட்டு அலங்காரம், சொல்நயம், பொருள்நயம் என்பனவற்றோடும் கூடி விளங்கும் செய்யுட்களைக் காட்டிலும் நாட்டுப் பாடல்களில் இயற்கையமைதி சிறந்து விளங்கும்.

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

புத்தி, உணர்ச்சி என்று மனிதனுக்கு இரண்டு வகை சக்திகள் உண்டு. மோட்டார் வண்டிக்கு பெட்ரோல் (எண்ணெய்) எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானவை அவைகள் உடம்புக்கு. மோட்டாரை இழுத்துச் செல்லும் சக்தி பெட்ரோலில் இருக்கிறது. மனிதனை இழுத்துச் செல்லும் சக்தி உணர்ச்சிக்கு உண்டு. உணர்ச்சிதான் மனிதனுடைய மூலபலம்.

உணர்ச்சி மனிதனை வாழ்வில் இழுத்துக்கொண்டு சென்றாலும், அதை அடக்கியாள ஒரு சாதனம் வேண்டும். மோட்டாருக்கு பிரேக் எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை மனிதனுக்கு புத்தி. புத்தியின் ஆட்சிக்குக் கட்டுப்படாத உணர்ச்சியின் தாங்கமுடியாத வேகத்தால் மனிதன் தேய்ந்து மாய்ந்து போய்விடுவான்.

புத்தியையும் உணர்ச்சியையும் பக்குவமாய் இணைத்து, அவைகளை மனிதனுக்குப் பெருந் துணையாகச் செய்வதே படிப்பின் நோக்கம்; பழக்கத்தின் பயன். உணர்ச்சி என்பது மின்சார சக்தியைப் போல.

(i) புத்தியும் உணர்ச்சியும் மனிதனுக்கு ஏன் அவசியமானவை?

(ii) உணர்ச்சியின் முக்கியத்துவம் என்ன? அது எதனுடன் ஒப்பிடப்படுகின்றது?

(iii) மனித வாழ்வில் புத்தியின் முக்கியத்துவம் என்ன? அதை பிரேக்குடன் ஒப்பிடுவதன் பொருத்தப்பாடு யாது?

(iv) படிப்பின் நோக்கமாகக் கூறப்படுவது எது?

(v) புத்தியின் ஆட்சிக்குக் கட்டுப்படாத உணர்ச்சியின் விளைவு யாது?

Department of Examinations

**(அ)**

- வாழ்விற்கு அவசியமானவற்றை அழகுடனும் இலக்கண அமைதியுடனும் படைக்கும் கவிஞரது படைப்புகள் பல, தமிழில் உள்ளன.
- நாட்டார் பாடல்கள், கிராமங்களில் வேலை செய்யும் மக்களால் களைப்பைப் போக்கப் பாடப்படுபவை.
- இவற்றைப் பண்பட்ட பாடல்களாக அறிஞர் கொள்ளார். எனினும், அவையே உயிரானவை, இனிமையானவை.
- வாய்மொழியாகவே பேணப்படுவதால் அவற்றை அழியாது காக்க, அறிஞர் சேகரிக்கின்றனர்.
- ஒரு நாட்டின் பண்பாட்டை இவை தத்ரூபமாகப் பிரதிபலிப்பதால் ஏட்டிலக்கியங்களைக் காட்டிலும் சிறப்புடையவை.

**(10 புள்ளிகள்)**

**(ஆ)**

(i)

- மனிதனுடைய ஒழுங்கான இயக்கத்துக்கு அடிப்படையாக அமைவதனால்

(ii)

- உணர்ச்சிதான் மனிதனுடைய மூலவளம்.
- பெற்றோலுடன் ஒப்பிடப்படுகிறது.

(iii)

- மனித உணர்ச்சியை அடக்கியாளுவது புத்தி.
- மோட்டார் வண்டியின் வேகத்தைப் பிரேக் கட்டுப்படுத்துவதுபோல, உணர்ச்சியின் வேகத்தைக் கட்டுப்படுத்துவது புத்தி.

(iv)

- உணர்ச்சியையும் புத்தியையும் பக்குவமாக இணைத்து, மனிதனுக்குப் பெருந்துணையாகச் செய்வது.

(v)

- மனிதன் தேய்ந்து மாய்ந்து விடுவான்.

**(02 x 5 = 10 புள்ளிகள்)**

**[10 + 10 = 20 புள்ளிகள்]**

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) தமிழ் நாடக வளர்ச்சிக்கும் ஆய்வு வளர்ச்சிக்கும் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பங்களிப்பு

(ஆ) இயற்கையைப் பேணுதல்

(இ) மற்றவர்களை மதித்தல்

(ஈ) நாகரிக வளர்ச்சிக்கு மொழியின் பங்களிப்பு

(உ) பண்பாட்டுப் பன்மைத்துவமும் தேசிய ஒருமைப்பாடும்

**(அ) பேராசிரியர் சு. வித்தியானந்தன்**

**தமிழ் நாடகவளர்ச்சி**

- நாட்டுக் கூத்துக்களை மீட்டெடுத்தமை:
  - புத்துருவம் அளித்தமை.
  - அண்ணாவிமார்களுக்குச் சமூக அந்தஸ்த்தைப் பெற்றுக் கொடுத்தமை.
  - கூத்துப் பிரதிகளை அச்சுருவாக்கியமை (எம்பரதோர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசௌந்தரி).
- கூத்துக்கள் பற்றிய ஆய்வுகள்.
- இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகச் செயற்பட்டமை (1956 - 1972).

**தமிழாய்வு வளர்ச்சி**

- நூல் - தமிழர் சால்பு
- கட்டுரைகள்
  - தமிழ் இலக்கிய, இலக்கணமரபு பற்றிய கட்டுரைகள்
  - இஸ்லாமிய, கிறிஸ்தவ இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகள் ( இவரது கட்டுரைகளிற் பல, தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன - இலக்கியத் தென்றல், தமிழியற் சிந்தனைகள், நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள் முதலியன).
- நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்து நடத்தியமை.

Department of Examinations

(ஆ)

**இயற்கையைப் பேணுதல்**

- இயற்கை குறித்த விளக்கம்
  - மனிதனால் ஆக்கப்படாத அனைத்துமே இயற்கையின் பாற்படும்.
- நிலம், நீர், காற்று, ஆகாயம் முதலான அனைத்துமே மனித வாழ்வாதார அடிப்படைகளாக அமைதல்.
- நவீன வாழ்வுச் சூழலும் இயற்கை எதிர்கொள்ளும் அனர்த்தங்களும்.
- மனித நடத்தைகளால் இயற்கையின் இயல்பு சிதைவடைதல்
- இயற்கையைச் சீரழிப்பதால் ஏற்படும் விளைவுகள் சமூகப் பிரச்சினையாக உருவாகும்போது, இயற்றையைப் பேண வேண்டும் என்ற எண்ணம் தோன்றுதல்.
- ஆரோக்கியமான வாழ்வுக்கு அடிப்படையான இயற்கையை அழிக்காது, சிதைக்காது பேணுவதன் மூலம் வாழ்வை மேம்படுத்தல்.

(இ)

**மற்றவர்களை மதித்தல்**

- மற்றவர்களை மதித்தல் என்பதன் விளக்கம்.
- பணிவுடையவர்கள் மற்றவர்களை மதிக்கும் பண்புடையவர்கள்.
- பணிவற்றோர் செருக்குடையவர்கள்; தம் பெருமை பேசுவாரேயன்றி மற்றவரை மதியார்.
- மற்றவரை மதிக்காதுவிட்டால் பகைமையும் விரோத மனப்பான்மையும் உருவாகும்.
- இனம், மதம், நிறம், வர்க்கம், பால், வயது என்ற அடிப்படையில் பேதம் பாராது எல்லோரையும் சமமாக மதித்தலின் அவசியம்.
- வாழ்வு செம்மையுற மற்றவர்களை மதித்தலின் அவசியம்.

(ஈ)

**நாகரிக வளர்ச்சிக்கு மொழியின் பங்களிப்பு**

- மொழி-நாகரிகம் பற்றிய அறிமுகம்.
- விலங்குநிலையிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் முக்கிய சாதனம் மொழி.
- மொழி, சிந்தனையின் கருவியாக விளங்குதல்.
- நாகரிக வளர்ச்சிக்கு மொழியின் இன்றியமையாமை:
  - கலாசார விருத்தி
  - தொடர்பாடல்
  - சமூக வளர்ச்சி
  - அறிவு விருத்தி
- நாகரிக வளர்ச்சியை உள்வாங்கிப் பதிவுசெய்தல்.
- மொழியில் ஏற்படும் மாற்றமும் நவீன அறிவியல் வளர்ச்சியில் மொழியின் பயன்பாடும்.
- சமூகத்தின் இருப்புக்கு மொழியின் அவசியம்.

Department of Examinations

(உ)

**பண்பாட்டுப் பன்மைத்துவமும் தேசிய ஒருமைப்பாடும்**

- பண்பாட்டுப் பன்மைத்துவம் : விளக்கம்.
- பல்லின சமூகமும் பண்பாட்டுப் பன்மைத்துவமும்.
- பன்மைத்துவத்தில் ஒருமைப்பாட்டைப் பேணுவதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குதல்.
- பண்பாட்டுப் பன்மைத்துவ நிராகரிப்பு, தேசிய ஒருமைப்பாட்டில் ஏற்படுத்திவரும் எதிர்மறைத் தாக்கங்கள்.
- பண்பாட்டுப் பன்மைத்துவத்தைப் பேணி, தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வழிமுறைகள்.

[08 + 08 + 04 = 20 **புள்ளிகள்**]

**4.** (அ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள் புறத்திணை சார்ந்தவற்றைக் குறிப்பிட்டு, அவைபற்றி விளக்குக.

(ஆ) காஞ்சித்திணை, பாடாண்திணை என்பன பற்றி விளக்குக.

(இ) ஆற்றுப்படை இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படையின் தனித்துவம் பற்றி கருத்துரைக்குக.

Department of Examinations

(அ)

**எட்டுத்தொகை**

- புறநானூறு : புறத்திணை மரபில் பாடப்பட்ட 400 பாடல்களின் தொகுப்பு.
- பதிற்றுப்பத்து : சேர மன்னர் பதின்மர்மீது தனித்தனியே பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு.
- பரிபாடல் : பரிபாட்டு என்னும் யாப்பில் அமைந்த பாடல்.

**பத்துப்பாட்டு**

- ஆற்றுப்படை நூல்கள் : ஆற்றுப்படை எனும் துறையில் அமைந்த நெடும் பாடல்கள்
  - திருமுருகாற்றுப்படை
  - பெரும்பாணாற்றுப்படை
  - சிறுபாணாற்றுப்படை
  - கூத்தராற்றுப்படை
  - பொருநராற்றுப்படை
- மதுரைக்காஞ்சி : நிலையாமை பற்றியது.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

**காஞ்சித்திணை**

- இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையை எடுத்துக்கூறுவது.
- ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சி என இரு வகையாகக் கூறப்படுவது.

**பாடாண்திணை**

- பாடப்படுகின்ற ஆண்மகனது ( அரசரது ) கீர்த்தி, வலி, கொடை, அளி ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுவது.

**(05 புள்ளிகள்)**

**(இ)**

- பாடியவர் : நக்கீரர்
- ஏனைய ஆற்றுப்படை நூல்கள் பொருள் வேண்டி அரசரிடம் இரவலரை ஆற்றுப்படுத்துவன, இது நிலையான பொருள் வேண்டி முருகனிடம் அடியவரை / புலவரை ஆற்றுப்படுத்துவது
- ஏனைய ஆற்றுப்படை நூல்கள் ஆற்றுப்படுத்தப்படுவோர் பெயரால் அமைய, இந்நூல் யாரிடம் ஆற்றுப்படுத்தப்படுகிறதோ அவர் (முருகன்) பெயரால் அமைதல்.
- பத்துப்பாட்டு நூல்களுக்கு, கடவுள் வாழ்த்துப்போல முதலில் வைக்கப்பட்டுள்ளது.
- முருகனின் அறுபடை வீடுகளும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**(05 புள்ளிகள்)**

[05 x 3 = 15 **புள்ளிகள்**]

5. (அ) சோழர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தி, அவைபற்றி விளக்குக.

(ஆ) நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார்பான சிற்றிலக்கியங்களின் பொதுப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

(இ) அருணகிரிநாதரின் தனியாற்றலை மதிப்பிடுக.

Department of Examinations

**(அ)**

**பரணி**

- ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் வென்ற வீரன்மேல் பாடப்படுவது. கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு முதலிய உறுப்புகள் அமைந்தது. புறப்பொருள் அமைதி தோன்ற கலித்தாழிசையில் அமைந்தது. பேய்கள் நிணக்கூழ் அட்டு உண்டு மகிழும் போர்க்களச் சித்திரிப்புக்கொண்டது. (கலிங்கத்துப்பரணி, தக்கயாகப் பரணி)

**பிள்ளைத்தமிழ் :**

- அரசர், கடவுளர், நல்லாசிரியர் இவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவர்களைக் குழந்தையாகப் பாவனை செய்து, பத்துப் பருவங்கள் வகுத்து, 100 பாடல்களில் பாடப்படுவது. ( குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்)

**உலா :**

- அரசர், கடவுளர், ஞானாசிரியர் ஆகியோர் உலாவரும்போது எழுவகைப் பருவப் பெண்களும் கண்டு காதல் கொள்வதுபோலப் பாடப்படுவது. (மூவருலா.)

**மெய்க்கீர்த்தி :**

- அரசர் புகழ்கூறும் கல்வெட்டுச் செய்திகள் அடங்கியது. ஆசிரியப்பாவில் அமைந்தது.

**வெண்பா :**

- வெண்பா யாப்பில் அமைந்தது. (நளவெண்பா)

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- பள்ளு, குறவஞ்சி, நொண்டிநாடகம் ஆகிய வடிவங்களில் அமைந்திருத்தல்.
- அடிநிலைமக்களைப் (பள்ளர், குறவர் முதலானோரை) பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை.
- அவர்களுடைய வாழ்க்கை, தொழில் முறைகளைச் சித்திரிப்பவை.
- அங்கதம், சிருங்காரம் ஆகிய சுவைகள் நிரம்பப்பெற்றவை.
- அடிநிலைமக்களின் பேச்சுமொழியை பிரதிபலிப்பவை.

**(05 புள்ளிகள்)**

(இ)

- திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தரலங்காரம் முதலிய முருக பக்தி இலக்கியங்களின் ஆசிரியர்.
- சந்த நலமும் ஓசைச்சிறப்பும் உடைய பாடல்கள் பல பாடியவர்.
- 'வாக்கிற்கு அருணகிரி' எனப் பிற்காலக் கவிஞர்களால் பாராட்டப்பட்டவர் ('உனைப்போல் மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்' – தாயுமானவர்).

**(05 புள்ளிகள்)**

[03 x 5 = 15 **புள்ளிகள்**]

**6.** (அ) ஐரோப்பியர் வருகையால் தமிழில் உரைநடை வளர்ந்தவாற்றை விளக்குக.

(ஆ) தமிழில் புனைகதை இலக்கியம் தோன்றுவதற்கு வாய்ப்பாக அமைந்த சூழ்நிலையினை விபரிக்குக.

(இ) தமிழ்ப் புனைகதை வளர்ச்சியில் வ.வே.சு. ஐயரின் பங்களிப்பை மதிப்பிடுக.

(அ)

- ஆங்கிலேயர் ஆட்சி நடைமுறைகளும் ஆங்கிலக் கல்வி விருத்தியும்.
- அச்சியந்திர அறிமுகமும் பதிப்பு முயற்சிகளும்.
- பாடசாலைக் கல்வியும் கல்வி நூலாக்க முயற்சிகளும்.
- பத்திரிகை வளர்ச்சி.
- சமயப் பிரசாரங்கள்.
- கண்டன நூல்கள், துண்டுப்பிரசுரங்கள்.
- மொழிபெயர்ப்பு முயற்சிகள்.
- நிர்வாகச் செயற்பாடுகள்.
- புனைகதை இலக்கியங்கள்.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations

**(ஆ)**

- ஆங்கிலேய காலனிய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் சமூக பொருளாதார மாற்றங்கள்:
  - நிலமானிய சமூகச் சிதைவும் முதலாளித்துவ சமூக உதயமும்.
  - ஆங்கிலக் கல்வி விருத்தி
  - மத்தியதர வர்க்க உதயம்.
  - நவீனத்துவ சிந்தனைகளின் வரவும் வளர்ச்சியும்.
  - உரைநடை வளர்ச்சி.
  - பத்திரிகை வளர்ச்சி.

**(05 புள்ளிகள்)**

**(இ)**

- தமிழ்ச் சிறுகதையின் தந்தை.
- மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள் (சிறுகதைத் தொகுப்பு).
- மேலைத்தேய இலக்கிய வடிவமான சிறுகதையைத் தமிழுக்கு இயல்பான வடிவமாக்கியமை.
- பிறநாட்டுக் கதாபாத்திரங்களை, தன் சிறுகதைகளில் அழகாகச் சித்திரித்தமை.
  - லைலா மஜ்னு, எதிரொலியாள், அனார்க்கலி, அழேன்ழக்கே
- மாண்புடைய மக்கட் பண்புகளை, தன் சிறுகதைகளில் வெளிப்படுத்தியமை (காதல், தியாகம், வீரம்).

**(05 புள்ளிகள்)**

**[05 x 3 = 15 புள்ளிகள்]**

Department of Examinations

பிரிவு 'ஆ'

7. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்

(அ) நாவல்

(ஆ) சிறுகதை

(இ) கவிதை

ஆகிய இலக்கிய வடிவங்கள் வளர்ந்தவாற்றை விளக்குக.

**(அ)**

- அற்புத சம்பவங்களையும் வீர சாகசங்களையும் அடிப்படையாகக் கொண்ட தழுவல் படைப்புக்கள்:
  - அஸன்பேயுடைய கதை (1885) - எம்.சி. சித்திலெப்பை.
  - ஊசோன் பாலந்தைக் கதை (1891) - இன்னாசித்தம்பி.

- வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.
  - மோகனாங்கி (1895) - தி.த. சரவணமுத்துப்பிள்ளை.
- சமூகப் பிரச்சினைகளைப் பேசுபவை.
  - நொருங்குண்ட இருதயம் (1914) - மங்களநாயகம் தம்பையா.
  - காசிநாதன் நேசமலர் (1924) - ம.வே. திருஞானசம்பந்தம்பிள்ளை.
  - நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (1925) - இடைக்காடர் (நாகமுத்து)

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- சிறுகதைக்குரிய பண்புகள் முழுமைபெறாத சிறிய கதையாக்க முயற்சிகள்
  - நன்நெறிக் கதாசங்கிரகம்
  - கதாசிந்தாமணி
  - ஊர்க்கதைகள்
  - ஹைதர்சா சரித்திரம்
  - ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை
  - பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணப்பிள்ளை
  - தம்பிமுத்துப்பிள்ளை
  - ஐதுருஸ் லெப்பைமரைக்காயர்

- சிறுகதைப் பண்புகள் அமையப்பெற்ற சிறுகதையாக்க முன்னோடி முயற்சிகள்
  - இலங்கையர்கோன்
  - வைத்தியலிங்கம்
  - சம்பந்தன்

- ஈழத்து வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட கதைகள்
  - ஈழகேசரி, பாரதி, மறுமலர்ச்சி முதலான சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகள் (1948 ஆம் ஆண்டுக்கு முந்தியவை)

**(05 புள்ளிகள்)**

(இ)

- மரபு ரீதியான இலக்கிய வடிவங்கள் மூலமாக புதுமை நாட்டமும் சமகாலச் சிந்தனை கொண்ட கவிதைகள் எழுதப்பட்டமை:
  - புராணம் : கனகி புராணம் (சுப்பையனார்), தாலபுராணம் (அச்சுவேலி காசிநாதப் புலவர்), கோட்டுப் புராணம் (கோப்பாய் வே. இராமலிங்கம்).
  - தூது : தத்தைவிடுதூது (தி.த. சரவணமுத்துப்பிள்ளை).

- மரபுசார்ந்த செய்யுள் பிரபந்தங்கள் செய்தோர்:
  - சுன்னாகம் முத்துக்குமார கவிராசர் (1780 -1851)
  - உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியார் (1791 - 1874)

- நவீன கவிதையின் முன்னோடிகள்:
  - பாவலர் துரையப்பாபிள்ளை
  - நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

**(05 புள்ளிகள்)**

**[05 x 3 = 15 புள்ளிகள்]**

Department of Examinations

**8.** பின்வருவோருள் யாரேனும் **மூவர்** ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

(அ) வரதபண்டிதர்

(ஆ) ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை

(இ) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(ஈ) கவிஞர் அப்துல் காதர் லெப்பை

(உ) கோ. நடேசையர்

**(அ)**

**வரதபண்டிதர்**

- ஒல்லாந்தர் காலத்துப் புலவர்.
- இலக்கியம், இலக்கணம், வைத்தியம் முதலியவற்றிற் சிறந்த புலமை உடையவர்.
- இயற்றிய நூல்கள்
  - ஏகாதசிப் புராணம்
  - சிவராத்திரி புராணம்
  - பிள்ளையார் கதை
  - கிள்ளைவிடுதூது
  - அமுதாகரம்
- சைவ மக்களின் பிரதான விரதங்களுடைய மகிமை, சிவன், திருமால், பிள்ளையார் ஆகியோரின் திருவிளையாடல்கள், இவ்விரதங்களை நோற்றுப் பயன் பெற்றோர் வரலாறு என்பன மேற்படி புராணங்களில் பாடப்பட்டுள்ளன.
- விசகடி வைத்தியம் : அமுதாகரம்

**(05 புள்ளிகள்)**

**(ஆ)**

**ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை**

- இலக்கியப் பணி
  - நன்னெறிமாலை, நன்னெறிக்கொத்து, இல்லறநொண்டி, நன்னெறிக் கதாசங்கிரகம் முதலிய நூல்கள்.
- இதழியல் பணி
  - உதயதாரகையின் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியாக விளங்கி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்.
- புலவர் வரலாறு
  - பாவலர் சரித்திரதீபகம்
- அறிவியல் நூலாக்கம்
  - சாதாரண இதிகாசம், வானசாஸ்திரம்

**(05 புள்ளிகள்)**

Department of Examinations

(இ)

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

- நாவலரது மாணவ பரம்பரையில் வந்தவர்.
- பழைய இலக்கியங்களுக்கான இரசனை விளக்கம் செய்தவர்.
- தமிழிலக்கிய வளர்ச்சியில் ஈழத்தின் பங்களிப்பை வலியுறுத்தியவர்.
- வாசகர்களை ஈர்க்கக்கூடிய தனித்துவ எழுத்து நடையில் கட்டுரைகளை எழுதியவர்.
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழைக் கற்பித்ததன் ஊடாக, இலக்கிய இரசனையும் ஆழமான புலமையுமுடைய ஆசிரியர்களை உருவாக்கியவர்.
- இவரது நூல்கள் - இலக்கியவழி, கம்பராமாயணக் காட்சிகள், நவபாரதம், அத்வைத சிந்தனைகள் முதலியன.

**(05 புள்ளிகள்)**

(ஈ)

**அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்**

- சிறுவயதிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றவர்.
- கவி வல்லமை காரணமாக, 'அருள்வாக்கி' என்னும் பட்டம் பெற்றவர்.
- பல்வேறு பிரபந்த வடிவங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்:
  - சந்தத்திருப்புகழ், பேரின்ப ரஞ்சித மாலை, திருமதீனத்து மாலை, பிரான்மலைப் பதிகம், சலவாத்துப் பதிகம், காரணப் பிள்ளைத்தமிழ், காட்டுபாவா சாகிபு கும்மி, கண்டிக் கலம்பகம், மெய்ஞ்ஞானக் குறவஞ்சி, கோட்டாற்றுப் புராணம், முனாஜாத்து முதலிய நூல்கள்.
- பல தனிச் செய்யுள்கள்

(உ)

**கோ. நடேசையர்**

- மலையகத் தமிழ் இலக்கிய முன்னோடி.
- எழுதிய நூல்கள் :
  - தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் (1937) (இலங்கையின் முதலாவது அரசியல் நாடகம்), நீ மயங்குவதேன், வெற்றியுனதே, கதிர்காமம், அழகிய இலங்கை முதலியன
- 'இராமசாமி சேர்வையின் சரிதம்' என்ற கதை ( மலையகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் முதலாவது சிறுகதை).
- பத்திரிகைகள்
  - தேசநேசன், தேசபக்தன், தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, சுதந்திரன் முதலியன.
- தனிக்கவிதைகள்.

**(05 புள்ளிகள்)**

[05 x 3 = 15 புள்ளிகள்]

Department of Examinations